**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 298 of 2018**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : திலகவதி** | **Father/Husband's Name : முரளி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 24.06.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பெத்தநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஊசி, பாசி விற்கும் தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சந்திரக்குமார் எனது அப்பா. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2017ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது அப்பா சந்திரகுமார் வியாபாரத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தபோது கருப்புச்சாமி கோவில் அருகே விபத்து ஏற்பட்டது. எனது அப்பா XL இருசக்கர வாகனம் ஓட்டி சென்றார். எனது அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் மீது பின்னால் வந்து டிராக்டர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. எனது அப்பாவின் மேல் டிராக்டரின் டயர் ஏறி தலை நசுங்கிவிட்டது. பின்னர் சம்பவம் கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு பழனி தாலுகா காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். நான் சம்பவம் கேள்விபட்டு சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மேற்படி டிராக்டரின் டிரைவர் சம்பவயிடத்தில் இல்லை. புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. எனது அப்பா இறந்த பின்பு மறுநாள் நான் எங்கே இருந்தேன் என்றால் வீட்டில் இருந்தேன். எனது அப்பாவின் உடலை Post Morterm என்றைக்கு செய்தார்கள் என்றால் இறந்ததற்கு மறுநாள் செய்தார்கள். புகாரில் எழுதியுள்ள சங்கதிகள் என்ன**

என்று எனக்கு தெரியாது என்றாலும் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் சரிதான்.

| | |
|---|---|
| நீதிமன்ற கேள்வி | தமிழ் படிக்க தெரியுமா என்றால் |
| பதில் | தெரியாது. |
| நீதிமன்ற கேள்வி | புகார் எதற்காக கொடுத்தேன் என்றால் |
| பதில் | விபத்து நடந்ததற்காக கொடுத்தேன். |

புகார் மனுவில் டிராக்டர் பதிவெண் விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் டிராக்டர் ஓட்டுநர் பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த திசையில் இருந்து டிராக்டர் வந்து எந்த திசையில் வந்த வாகனத்தை அடித்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் அஜாக்கிரதையாக, கவனக்குறைவாக வண்டி ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி குற்றமற்றவர் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.24 17:49:55 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 298 of 2018**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : ஜீதா** | **Father/Husband's Name : செல்வம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 24.06.2026.**

**Accused present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பெத்தநாயக்கன்பட்டியில் குடியிருந்து ஊசி, பாசி விற்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது உடன் பிறந்த அண்ணன் மகள். விபத்தில் இறந்துபோன சந்திரக்குமார் எனது உடன் பிறந்த அண்ணன். கடந்த 2017ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் V.K. மில்லுக்கு ஆதார் கார்டு விசயமாக சென்றுவிட்டு சின்னகலையம்புத்தூர் அருகே வரும்போது லோடு ஏற்றி வந்த டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டது. எனது அண்ணன் ஓட்டி சென்ற TVS XLன் வாகன பதிவெண் எனக்கு தெரியாது. டிராக்டர் பதிவெண் எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தை நான் கேள்விபட்டு வந்து பார்த்தபோது டிராக்டர் சம்பவயிடத்தில் இருந்தது, டிரைவர் இல்லை. எனது அண்ணனுக்கு தலை நசுங்கி அங்கே இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. நான் போலிஸ் விசாரணையில் முதல் விசாரணையில் சொன்னதை தான் சொன்னேன் என்றால் சரிதான். வாகனங்களின் பதிவெண் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் வண்டியை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அண்ணன் இறந்த பின்பு அவரது உடலை வாங்குவதற்கு மருத்துவமனையில் இருந்தோம் என்றால் சரிதான். மருத்துவமனையில் எனது அண்ணன் உடலை வாங்கும்போது போலிசார் என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை, நாங்கள்**

அழுது கொண்டிருந்தோம். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி குற்றமற்றவர் என்றாலும் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.06.24 17:50:02 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 298 of 2018**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : தமிழன்** | **Father/Husband's Name : சந்திரக்குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 24.06.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பெத்தநாயக்கன்பட்டியில் குடியிருந்து மணிமாலை வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.09.2017ம் தேதி எனது அப்பா இறந்த மறுநாள் சுமார் மதியத்திற்கு மேல் 1.00 – 2.00 மணியளவில் நானும், நந்தகுமார் என்பவரும் பெத்தநாயக்கன்பட்டியில் இருந்து வளைவு செல்லும் சாலையில் கருப்புச்சாமி கோவில் அருகே விபத்து நடந்த இடத்தில் நானும், நந்தகுமார் என்பவரும் பேசி கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், நந்தகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.06.24 17:50:13 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 298 of 2018**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : நந்தகுமார்** | **Father/Husband's Name : சங்கர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 24.06.2026.**

**Accused present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பெத்தநாயக்கன்பட்டியில் குடியிருந்து மணிமாலை, பச்சை குத்தும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.09.2017ம் தேதி எனது அப்பா இறந்த மறுநாள் சுமார் மதியத்திற்கு மேல் 1.00 – 2.00 மணியளவில் நானும், தமிழன் என்பவரும் பெத்தநாயக்கன்பட்டியில் இருந்து வளைவு செல்லும் சாலையில் கருப்புச்சாமி கோவில் அருகே விபத்து நடந்த இடத்தில் நானும், தமிழன் என்பவரும் பேசி கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், தமிழன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.06.24 17:50:24 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**